**ARTICLE 58 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00058**
Vol. 20, No. 01 (October 2026) – Part III | pp. 26–29
Received: 1 October 2026 • Accepted: 3 October 2026

# தென்மாவட்டங்களில் நாட்டுப்புற நம்பிக்கை

**வேல்விழி தே**[1,*]

[1]பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர் , பச்சையப்பன் கல்லூரி ,சென்னை -30., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** வேல்விழி தே — tamilseminar12@gmail.com

### ஆய்வுச் சுருக்கம்

இக்கட்டுரையில் குறிப்பிட்ட சில வட்டாரத்தின் நாட்டுப்புற நம்பிக்கைகள் குறித்து ஆராயப்படுகிறது வாய் மொழியாக மரபுகள் எவ்வாறு மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் அடுத்த தலைமுறைக்கு கடத்துகின்றன என்பதை விளக்குவது முக்கிய நோக்கம் ஆகும். இதற்காக கையாண்டு ஆய்வு முறைகள் மற்றும் அதன் முடிவுகள் சுருக்கமாக இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. முன்னுரை: மனித நாகரீகத்தின் தொடக்க காலத்தில் இருந்தே நாட்டுப்புற வழக்காலும் தோன்றி விட்டன. வாய்மொழியாகவும் பார்த்து செய்தல் மூலம் தலைமுறை தலைமுறையாக கடத்தப்படும் தலைகள் பாடல்கள் சடங்குகள் கவிதைகள் பழமொழிகள் போன்ற அனைத்தும் நாட்டுப்புறவியல் எனப்படும். இக்கட்டுரையின் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் பற்றிய ஆய்வை மேற்கொள்கிறத

**Keywords / திறவுச் சொற்கள்:** நாட்டுப்புற நம்பிக்கைகள்; மரபுகள்; வழக்காறுகள்; நாட்டுப்புற மக்களின் வாழ்வியல்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** தே, வே. (2026). தென்மாவட்டங்களில் நாட்டுப்புற நம்பிக்கை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## நாட்டுப்புறவியல்

இவ்வுலகில் மனித இன வரலாற்றில் மொழியின் தோற்றம் பற்றி திட்டமிட்டு கூற முடியாதது போன்று மக்களின் இலக்கியமான நாட்டுப்புற இலக்கியத்தின் தோற்றம் பற்றியும் வரையறுத்து கூற முடியாது மொழியின் தோற்றம் உருவான போதே மனித இனமும் தன் சிந்தனை திறனை வளர்க்க முற்பட்ட போதே வாய்மொழி இலக்கிய வகை உருவானது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கம் பண்பாடு நம்பிக்கை இலக்கியம் அவற்றை ஆராய்வதை நாட்டுப்புறவியல் ஆகும் ஒரு நாட்டின் வாழ்வையும் வரலாற்றையுணம் குறையையும் நிறையையும் தெளிவாக காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள் மக்களின் பண்பாடு பழக்கவழக்கங்கள் பழமையான எண்ணங்கள் ஆகியவற்றை வெளிப்படையாக காட்டும் கால கண்ணாடி ஆகும். நாட்டுப்புற மக்களின் உணர்வுகளையும் கவிதை புனையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் நாட்டுப்புற இலக்கியங்களில் காணலாம் மேலும் நாட்டுப்புற வழக்குகள் பற்றி அறிவியல் அடிப்படையில் ஆராயும் இயல் நாட்டுப்புறவியல் ஆகும்.

## நாட்டுப்புறவியல் சொல்லாக்கம்

Folkloreஎன்பது Folk , Lore என்ற இரு சொற்கள் இணைந்ததாகும் 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகள் Folk என்ற சொல் விவசாய மக்களை குறித்து பின்னர் படிப்பறிவு இல்லாத நாட்டுப்புற மக்களை குறித்து

பொதுவான தொழில் மொழி சமயம் முதலியவற்றை பின்பற்றும் குழுவை Folk என்பர். பொதுவாக கிராமப்புற படிப்பறிவு இல்லாத மக்களை குறிக்கும் 'Lore' என்பதற்கு மரபுச் செய்தி தொகுதி என்னும் வழக்காரு என்னும் பொருள் கொள்ளலாம்.Folklore என்பது நாட்டுப்புற மக்களின் அறிவு என பொருள்படும் நாட்டுப்புற வழக்காற்றை Folklore என்னும் நாட்டுப்புற வழக்காற்றை ஆராயும் ஆய்வை "Folkloristics" என்றும் கூறலாம்.

## நாட்டுப்புற நம்பிக்கைகள்

நாட்டுப்புறவியலை நாட்டுப்புற இலக்கியம் கலை என்ற பிரிவினுள் அடக்குகின்றனர். ஆனால் நாட்டுப்புறவியல் இவற்றுடன் நின்று விடாமல் நாட்டுப்புற நம்பிக்கை ஆடல், ஓவியம், பொருள் சார் பண்பாடு ஆகியவற்றையும் ஆராய்கிறது.

"நாட்டுப்புறவியல் என்பது நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும்". நாட்டுப்புறவியல் என்பது மக்களது நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். நாட்டுப்புற நம்பிக்கை நாட்டுப்புற மக்களின் 'பொதுக்கூறு' எனப்படும்.

"மக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவற்றை பண்படாத மலர்கின்றன என்கிறார் மானிடவியல் பேரறிஞர் டெய்லர் அவர்கள். வாழ்க்கை முறைகளில் கூட்டு சேர்க்கை பண்பாடு என்கிறார் மாலினோவஸ்கி" . எனவே நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கை என்கிறார்.

## பண்டைத் தமிழரின் நம்பிக்கைகள்

பண்டைய காலம் முதல் மனிதன் இயற்கையோடியைந்து வாழ்ந்து வருகிறான். இயற்கை மாறுதலுக்கு ஏற்ப மனித மனமும் மாறுபடுகின்றது. இயற்கையோடு இணைந்த மனித வாழ்க்கையில் நம்பிக்கைகள் தோன்றலாயின. உலகெங்கிலும் உள்ள பண்டைய சமுதாய வரலாற்றை நோக்கின இவ்வுண்மை விளங்கும் பண்டைய தமிழருடைய நிலவிய நம்பிக்கைகளையும் சகுனங்களையும் தொல்காப்பியத்தில் "நாளும் புல்லும் பிறவாற்று நிமித்தமும்" (தொல்காப்பியம் பொருள் அதிகாரம் -91) எனக் குறிக்கப்பட்டுள்ளது. 'புள்' என குறிப்பிட்டது முன்னர் பறவையையும் பிற்காலத்தே நம்பிக்கைகள் குறித்த சகுனங்கள் பற்றியும் குறிப்பதாக அமைந்துள்ளன.

> "கூகை அலறினால் சாவும் வரும் என்ற நம்பிக்கை பண்பாட்டை
> தமிழரிடையேயும் இன்னும் தமிழகத்தின் நிலவி வருவதை அறியலாம்.
> இதனை புறநானூறு காட்டுகிறது.
> "அஞ்சுவரு குராஅல் குரலுந் கூற்றம் புறம் (280) காகம் கத்தினால்
> விருந்தினர் வருவர் என்பது அக்கால முதல் இக்காலம் வரை தமிழரிடையே
> நிலவி வரும் நம்பிக்கையாகும்.

## நம்பிக்கை வகைகள்

நாட்டுப்புற மக்களிடையே எண்ணற்ற நம்பிக்கைகள் நிலவுகின்றன. குழந்தை பற்றிய நம்பிக்கைகள் ,பிள்ளைப்பேறு நோன்பு ,கண்ணீர் கழித்தல் ,காது குத்துதல், குழந்தை கொடி சுற்றி பிறத்தல், அடுத்ததாக

பருவமடைதல் பற்றி நம்பிக்கைகள், திருமணம் பற்றிய நம்பிக்கைகள், கர்ப்பிணி பெண்கள் பற்றிய நம்பிக்கைகள், வேளாண்மை பற்றிய நம்பிக்கைகள், மழை பற்றிய நம்பிக்கைகள், விலங்கு பறவை பற்றி நம்பிக்கைகள், விருந்தினர் பற்றி நம்பிக்கைகள், எண் பற்றிய நம்பிக்கைகள், நட்சத்திர நம்பிக்கைகள், அங்கம் பலன் பற்றி நம்பிக்கைகள், மச்சங்களின் பலன் பற்றிய நம்பிக்கைகள், கிழமை பற்றிய நம்பிக்கைகள், திசை ,கோலம் பற்றிய நம்பிக்கைகள், விலங்கு ,கடவுள், அபிஷேகம் பற்றிய நம்பிக்கைகள், மாரியம்மன் பற்றி நம்பிக்கைகள் ,நோய்கள் மற்றும் ஈடு பற்றிய நம்பிக்கைகள், உணவு, ஆடை, அணிகலன்கள் பற்றி நம்பிக்கைகள், மரணம் ,பயணம் பற்றி நம்பிக்கைகள், ஊழ்வினை பிறவிக் கொள்கை பற்றிய நம்பிக்கைகள், எமன் ,தலையெழுத்து ,விதி பற்றிய நம்பிக்கைகள், சோதிடம், பஞ்சாங்கம், ராசி பொருத்தம் பற்றிய நம்பிக்கைகள், கனவு பற்றிய நம்பிக்கைகள் ,போன்றவை மக்களிடையே காணப்படுகின்றன.

## நிமித்தங்கள் (சகுனம்) பற்றிய நம்பிக்கைகள்

சகுனம் பார்க்கும் நம்பிக்கை உலகெங்கிலும் காணப்படுகின்றது. "பண்டைய தமிழர் இதனை புல் நிமித்தம் ஆகிய சொற்களால் குறிப்பிட்டுள்ளனர். நிமித்தம் என்பது வாழ்வில் நிகழவிருக்கும் நன்மை தீமைகளை சில குறியீடுகளின் வாயிலாக உணர்த்துவதாகும்." நிமித்தங்கள் அனைத்தும் நம்பிக்கை பாற்பட்டன.

"அழுக்குத் துணியோடு வண்ணான் வருதல்"
"தாயும் சேயும் வருதல்"
"சுமங்கலி வருதல்"

போன்றவற்றை ஆகும் நல்ல சகுனங்கள். எனவே நல்ல சகுனம் தோன்றினால் அச்செயல் நல்லதாக முடியும் என்பது நம் முன்னோர்களின் நம்பிக்கையாகும்.

தீய சகுனம் தோன்றினால் அச்செயல் தோல்வி அடையும் என்பது நம் நம்பிக்கையாக உள்ளது. விதவை எதிர் வால், பூனை குறுக்கிடுதல், ஒற்றை பார்ப்பனன் எதிரே வருல் போன்றவற்றை கெட்ட சகுனம் என்றும் கருதுகின்றனர். சகுனத்தில் மக்களுக்கு நம்பிக்கை உண்டு என்பதை இவை எடுத்துக்காட்டுகின்றன.

## மக்களிடையே நிலவும் பிற நம்பிக்கைகள்

மனிதனால் பார்க்கப்படும் சகுனங்களில் மிக முக்கியமானது பல்லி சகுனம் ஆகும். நமது சமுதாயத்தில் பல்லி சகுனம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததால் " கௌரி சாஸ்திரம் "என்ற நூலினை நமது முன்னோர்கள் இயற்றியுள்ளனர். பல்லி சகுனம் என்பது சொல்பலன் விழுபலன் என இரண்டு வகைப்படும். பல்லி சொல்லும் எண்ணிக்கை திசை ,கிழமை வைத்தும் விழும் பலன் வைத்தும் நம்பிக்கை கொண்டுள்ளனர் நம் முன்னோர்கள்.

பில்லி சூன்யம் ,செய்வினை வழக்கங்கள் ,பல்பொருள் சவரம், செய்யாமை ,சத்தியம் செய்தல் ,கொடும்பாவி கட்டி இழுத்தல் வெற்றிலை பாக்கு போடும்போது வாய் சிவத்தல் போன்ற நம்பிக்கைகளை நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர்.

## முடிவுரை

நாட்டுப்புறவியல் என்பது ஒரு சமூகத்தின் வேர் போன்றது. தமிழகத்தில் கிராமப்புறங்களில் இன்னும் நம் மக்கள் இது போன்ற நிகழ்வுகளையும், அனுபவங்களையும் நம்பிக்கையாக பின்பற்றி வருகின்றனர். கால மாற்றத்திற்கு ஏற்ப அழியும் நிலையில் உள்ள பாரம்பரிய நாட்டார் வழக்காறுகளை ஆவணப்படுத்தும் கல்வி பாடத்திட்டங்களில் இவற்றை இணைப்பதும் காலத்தின் கட்டாயமாகும்.

## துணைநூற் பட்டியல் (References)

1. சக்திவேல். சு - நாட்டுப்புற இயல் ஆய்வு மாணிக்கவாசகர் பதிகம்.
2. இ.ராமநாதன்.ஆறு - நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம்.
3. லூர்து.தே - நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்.
4. பேராசிரியர். மு. சண்முகம் பிள்ளை - தொல்காப்பியம் பொருளதிகாரம் (இளம்புரணர் உரை )முல்லை நிலையம் சென்னை - 17.
5. உரையாசிரியர்
6. முனைவர். அ. விசுவநாதன் தலைமை பதிப்பாசிரியர்.
7. முனைவர் அ.மா. பரிமணம்.
8. முனைவர். கு.வெ.பாலசுப்பிரமணியன் - புறநானூறு (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை -98.

© 2026 வேல்விழி தே. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..